2017 ஜூன் 28]

இதுவரையில்லாத சரித்திரங்களையெல்லாம் உடைத்தெறிந்து, நல்ல பல திட்டங்களையெல்லாம் பள்ளிக் கல்வித் துறைக்கு அறிவித்து, சிறப்பு சேர்த்துள்ள பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களது தேனி மாவட்டத்திலே, தேனி நகரத்தில் மட்டும் ஒரேயொரு அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. அது இருபாலர் பள்ளி. அங்கே பல்வேறு தனியார் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. ஆனால், அந்த இருபாலர் படிக்கின்ற உயர்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பள்ளி தேனி–அல்லிநகரத்தில் இருக்கிறது. அந்தப் பள்ளியில் மாணவர்களும், மாணவிகளும் அதிகமாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நிபந்தனைகளுக்கேற்ப அந்தப் பள்ளியைப் பிரிப்பதற்குண்டான இடவசதி மற்றும் அனைத்து வசதிகளும் மற்றும் மாணவிகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்குமேயானால், அப்பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகளாகப் பிரிப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று, அதற்கான உத்தரவு வழங்கப்படும்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, தமிழகத்தில் பல்வேறு மாற்றங்களை கல்வித் துறை உருவாக்கியிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் பெரிய மாற்றங்களை நீங்கள் காணப் போகிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு நகராட்சி

[2017 ஜூன் 28

நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

92—

பாதாள சாக்கடைத் திட்டம்

***2481—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டவுடன், இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டு, திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். மறைந்தும், மறையாமலும் மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கின்ற, எங்களை வாழவைத்துக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். "கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா" என்ற பாடலுக்கு ஒப்பாக, இன்றைக்குக் கேட்டதும் கொடுக்கின்ற*

2017 ஜூன் 28]

ஒரு முதலமைச்சராக, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்போது சீர்காழி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள்.

சீர்காழி ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலம் எங்கள் ஊர். நவக்கிரகத் தலங்களில் புதன், செவ்வாய், அங்காரகன், இம்மூன்றும் இருக்கின்ற ஊர், எங்கள் ஊர். மிகப் பெரிய அளவில் பக்தர்கள் வந்து செல்கின்ற ஊராக இருக்கின்ற எங்கள் ஊரில் பாதாள சாக்கடைத் திட்டத்தை மிக விரைவாகச் செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகராட்சியில் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டைய கணக்கெடுப்பின்படி 34,880 ஆகும். இதன் பரப்பளவு 13.21 சதுர கி.மீ. ஆகும். சீர்காழி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களும் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் பலமுறை என்னை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்திருக்கிறார். சீர்காழி தொகுதி மக்கள், தங்கள் சட்டமன்ற உறுப்பினர் இந்தத் திட்டத்தை உடனடியாகச் செய்து தருவார் என்று அவர்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினரும் பலமுறை என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு*

முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு ஆய்வு செய்யும்போது, இதற்கான மதிப்பீடு ரூ.61 கோடியாக இருந்தது. தற்போது இதன் மதிப்பீடு ரூ.85 கோடியாக உயர்ந்திருக்கிறது. முழுமையாக ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆய்வுப் பணிகள் முடிவடைந்ததும், நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டவுடன், இத்திட்டப் பணிகளை உடனடியாகச் செய்து தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டப் பணிகள் கூடியவிரைவில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டப் பணிகளை இந்த நிதி ஆண்டிலேயே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கனிவோடு கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

2017 ஜூன் 28]

திருப்பூர் வடக்கு தொகுதியில், திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 29 வார்டுகளில் 9 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள வார்டுகளில், ஒருங்கிணைக்கப்பட்ட 14 வார்டுகளிலும், ஏற்கெனவே நகராட்சியாக உள்ள 6 வார்டுகளிலும் இத்திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அந்தப் பகுதிகளிலும் இத்திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கையே, அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளுக்கெல்லாம் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர வேண்டும் என்பதுதான். அதனடிப்படையில்தான் இன்றைக்கு அதிகமான திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நிதி ஆதாரம் ஒன்றுதான் முக்கியமான பிரச்சினை. அதுமட்டுமல்லாமல், அவர்* added areas*–க்கு கேட்கின்றார். புதிதாக விரிவாக்கப்பட்ட மாநகராட்சி பகுதிக்குக் கேட்கின்றார் என்று நினைக்கின்றேன். அப்படி பார்த்தீர்களென்றால் சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர் இப்படி பல இடங்களில் விரிவாக்கம் செய்யப்பட்டது. அதிலெல்லாம் இன்றைக்கு அதிகமான பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் நகராட்சிப் பகுதிகளில் இருந்திருக்கின்றன. இந்தப் பகுதிகளெல்லாம் கண்டிப்பாக தொடர்ந்து ஆய்வில் உள்ளன. நிதி ஆதாரம் பெறப்பட்டவுடன் கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தமிழினத் தலைவர், கழகத் தலைவர், 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சராக இருந்து பணியாற்றிய நம்முடைய தமிழக முன்னாள் முதல்வர், என்னை வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக அறிவித்த தலைவர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) செயல் தலைவர், நம்முடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

துணைத் தலைவர், முதன்மைச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்களையும் வணங்கி, திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தின் செயலாளர் முன்னாள் அமைச்சர், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்களையும் வணங்கி, எங்களுடைய மாவட்டச் செயலாளர் ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. காந்தி அவர்களையும் வணங்கி, நம்முடைய மாவட்டச் செயலாளர் நந்தகுமார் அவர்களையும் வணங்கி, எங்களுடைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்–மாவட்ட அவைத் தலைவர் அண்ணன் முஹமது சகி அவர்களையும் வணங்குகிறேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம்.

அதேபோல, கழகத் தோழர்களுக்கும் கூட்டணிக் கட்சியினுடைய காங்கிரஸ் தோழர்களுக்கும், நம்முடைய இஸ்லாமிய மக்களுக்கும், எனக்கு வாக்களித்து, 88,216 வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றி பெறச் செய்த வேலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலூர் மாநகராட்சியில் நான் பொறுப்பேற்ற காலத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை நிறைவேற்றிக்காட்டியிருக்கின்றோம். இரண்டாம் கட்டப் பணிகள் வேலூர் மாநகராட்சியிலே எப்போது தொடங்கும்? அதற்குத் தேவையான நிதியை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இரண்டாம் கட்டப் பணிகளை எப்போது தொடங்குவார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.

2017 ஜூன் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எல்லோரையும் வணங்கியே உரையை முடித்துவிடுவார் என்று நினைத்தேன். எல்லோரையும் வணங்கி, பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களை மட்டும் மறந்துவிட்டார் என்று நினைக்கிறேன். நீங்கள்தான் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அனைத்துப் பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். அதேபோல, வேலூருக்கும்கூட 2016–2017 ஆம் ஆண்டிலே பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக 348 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பணிகளைச் செய்ய உத்தரவிட்டுள்ளார்கள். அது நிறைவேற்றப்படும்.

அதேபோல, இதற்கு முன்னரே நான் சொல்லியிருக்கிறேன். கடந்த ஆட்சியிலே 55 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டன. அவற்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட 19 திட்டங்களில், ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு, மீதி திட்டங்கள் எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கிட்டத்தட்ட 1,500 கோடி ரூபாய் அளவிற்கு நிதியொதுக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டன. எனவே, அம்மா அவர்கள்தான் அதிகமான திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்கள். நீங்கள் கேட்ட உங்களுடைய கோரிக்கைக்கும் இப்போது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்; கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள். (குறுக்கீடு) இருங்கள். புதிய உறுப்பினர்கள் எல்லோருக்கும் வாய்ப்புத் தர வேண்டுமல்லவா? கேள்வி கேட்காதவர்களுக்கெல்லாம் வாய்ப்புத் தர வேண்டுமல்லவா?

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் இதயத்திலே நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

கழகத்தினுடைய பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களை வணங்கி, மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன்.

தஞ்சை மாநகராட்சி இப்போது Smart City ஆக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்ற நிலையிலே, தஞ்சை மாநகராட்சியிலிருந்து இரண்டாம் கட்ட, மூன்றாம் கட்ட பாதாள சாக்கடை விரிவாக்கத் திட்டத்திற்கான கருத்துருக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாநகராட்சியினுடைய மையப் பகுதி என்பது சிறிய, சிறிய சந்துகளாக அமைந்துள்ள பகுதி. எனவே, அந்தப் பகுதிகளெல்லாம் பாதாள சாக்கடைத் திட்டத்தில் விடுபட்டிருக்கின்றன. Smart City என்று அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற அந்த நகரம் பொலிவோடு விளங்க வேண்டுமென்றால், அங்கு பாதாள சாக்கடைத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டால்தான், அது நிறைவேற்றப்படும். எனவே, இந்தத் திட்டத்தினை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள் Smart city என அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதன்கீழ் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்களில் பாதாள சாக்கடைத் திட்டமும் வருகிறது. அதேபோல் AMRUT திட்டத்திலும் பாதாள சாக்கடைத் திட்டம் வருகிறது. எனவே, இந்தத் திட்டத்தில் இல்லாவிட்டாலும்கூட,

வேறு ஏதாவது திட்டத்திலிருந்து நிதியை எடுத்துக்கொள்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருச்செந்தூர் பேரூராட்சிப் பகுதியில், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், மரியாதைக்குரிய மத்திய அமைச்சராக இருந்த அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்களால் பாதாள சாக்கடைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் அப்போது தொடங்கப்பட்டிருந்தாலும், அவசர அவசரமாக கடந்த தேர்தலுக்கு முன்னால் பயன்பாட்டுக்கு வருகின்ற வகையிலே அதை இந்த அரசு நிறைவேற்றி வைத்தது. ஆனால், இதுவரை அந்தத் திட்டம் பயன்படவில்லை. ஆகவே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை மாண்புமிகு சபாநாயகர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றியெல்லாம் நான் என்னுடைய மானியக் கோரிக்கையின்போது பேசியிருக்கிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எத்தனை திட்டங்களை எடுத்தார்கள், எத்தனை திட்டங்களை முடித்தார்கள் என்றும், எத்தனை திட்டங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கினார்கள் என்றும் நான் சற்று முன்னர்தான் சொன்னேன். நீங்கள் ஆரம்பித்த நிறைய திட்டங்களை அப்படியே விட்டுவிட்டீர்கள். மீதியிருந்த திட்டங்களுக்கும் அம்மா அவர்கள்தான் நிதி ஒதுக்கினார்கள். உறுப்பினர் சொன்ன திட்டமும் அப்படித்தான். மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை குறித்து அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதைவிட்டு மறையாமல் நீக்கமற நிலைத்து வாழ்ந்துகொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாத மலர்கள் பணிந்து வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசை தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கின்ற நல்லரசின் நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சித் துறைக்கு உறுதுணையாக விளங்கி, நல்லமுறையில் நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், தங்களையும் பணிந்து வணங்குகிறேன்.

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் இதய தெய்வம் அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, கடந்த ஆட்சிக் காலத்திலே அது நிறைவேற்றப்படாமல், இதய தெய்வம் அம்மா அவர்களால் கூடுதல் நிதி ஒதுக்கப் பெற்று, அத்திட்டத்தின் 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பெற்றுள்ளன. தற்பொழுது அந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெறவும், திட்டத்திலே விடுபட்ட பணிகளை நிறைவேற்றிடவும் வேண்டுகிறேன். வருகின்ற ஆடித் திருவிழாவின்போது அத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, அந்தத் திட்டப் பணிகள் 90 சதவிகிதம் முடிவடைந்துவிட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படுகின்ற இந்த அரசு கண்டிப்பாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றும். பொது மக்களின்மேல் நன்மதிப்பு வைத்து,

2017 ஜூன் 28]

மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற எண்ணத்திலே வைக்கப்பட்ட நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

நீதிமன்றக் கட்டடம்

***6573—திரு. வீ. அலெக்சாண்டர்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, அம்பத்தூர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உயர் நீதிமன்றத்திலிருந்து கருத்துரு பெறப்பட்டவுடன் புதிய நீதிமன்றம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர் அவர்கள்.*

திரு. வீ. அலெக்சாண்டர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர், (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் எங்களுடைய சத்துணவு தந்த சரித்திர நாயகன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசாக வாழ்ந்து, மண்ணுலகை ஆண்டு, இன்று விண்ணுலகையும்*